**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM**

| | | |
|---|---|---|
| Case number | : | CC 156 of 2014 |
| Deposition of witness | : | PW - 6 |
| Name | : | முருகன் |
| Father Name | : | நல்லமுத்து |
| Age | : | 52 |

**A1, A4 died. A2, A3 absent**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். மளிகை கடை வைத்துள்ளேன். புகார்தாரர் இசக்கிமுத்துவை எனக்கு தெரியும். எதிரிகள் சங்கரநாராயணன், நம்பி, ஸ்ரீரங்கன், கோவிந்தன் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 2013 ஆம் வருடம், தேதி மாதம் தெரியவில்லை, காலை சுமார் 09.30 மணியளவில் சங்கரநாராயணனும் புகார்தாரர் இசக்கிமுத்துவும் ரோட்டில் கட்டி பிடித்து உருண்டு கொண்டிருந்தார்கள். சத்தம் போட்டு அவர்களை போக சொன்னேன். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக தீர்மானிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்கப்படுகின்றன)**

2. கடந்த 08.10.2013 ஆம் தேதி காலை 09.30 மணியளவில் பெருமாள் கோவில் தெருவில் உள்ள கண்ணன் சிலை அருகே புகார்தாரர் இசக்கிமுத்து நடந்து வந்து கொண்டிருந்தபோது இந்த வழக்கின் எதிரிகள் நால்வரும் அங்கு வந்து புகார்தாரர் இசக்கிமுத்துவை கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசி கீழே கிடந்த கல்லை எடுத்து அடித்து காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்களது ஊரை சேர்ந்தவர்கள்

என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.09 14:36:07 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்